# 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வடமத்திய மாகாண சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் 23(1) ஆம் பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடனும் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மாகாண சபைகள் சட்டத்தின் 23(2) ஆம் பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் உப பிரிவினதும் ஏற்பாடுகளின் பிரகாரம் பொழிப்பறிக்கை 2023 யூலை 31 ஆந் திகதி வழங்கப்பட்டதுடன் தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 யூன் 20 ஆந் திகதி வழங்கப்பட்டது. அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரை மற்றும் தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கும், அறிக்கையின் பிரதி 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் 23(2) ஆம் பிரிவின் பிரகாரம் மாகாண சபையில் முன்வைப்பதற்காக ஆளுனருக்கும் சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ளதாக்கப்பட்ட பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வடமத்திய மாகாண சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதி நிலைமைக் கூற்றில் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு குறுங்கால முதலீட்டு மீதி ரூபா 1,798,423,885 ஆக இருந்த போதும், மாகாண திறைசேரி அச்சிடல் குறிப்பின் பிரகாரம் அந்த மீதி ரூபா 1,796,921,975 ஆனமையால் மீளாய்வாண்டின் இறுதியில் முதலீட்டின் மீதி ரூபா 1,501,910 இணக்கமின்மை காணப்பட்டது. | 2021 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட முதலீட்டின் பெறுமதி ரூபா 1,501,910 தலைப்பு இலக்கம் 661 இல் உள்ளடக்கப்படாமையால் இந்த இணக்கமின்மை ஏற்பட்டிருந்தது. 2023 ஆம் ஆண்டின் போது சரி செய்யப்பட்டுள்ளது. | நிதிக் கூற்றுக்கள் தயாரிப்பதற்கு முன் உரிய தலைப்பின் வருமானம் மற்றும் செலவினங்கள் திறைசேரி புத்தகங்களுடன் இணக்கம் செய்து சரியான மீதியை நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்குதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நிதி நிலைமைக் கூற்றில் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய முதலீட்டு வட்டியாக ரூபா 75,397,260 காண்பிக்கப்பட்ட போதிலும், கணக்காய்வின் போது மேற்கொள்ளப்பட்ட கணிப்பீட்டின் பிரகாரம் அப்பெறுமதி ரூபா 140,185,976 ஆனமையால் மீளாய்வாண்டிற்குரிய வட்டி வருமானம் ரூபா 64,788,716 குறைத்து நிதிக் கூற்றுக்களுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. | 2023 ஆம் ஆண்டின் போது சீராக்கங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வட்டி சரியாக கணிப்பிடப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களுடன் குறிப்பு 06 குறிப்பு 07.1 இன் பிரகாரம் மூன்று மூலதன செலவினங்களுக்குரிய செலவினம் ரூபா 914,673,651 ஆக இருந்த போதும், மாகாண அமைச்சுக்கள்/ திணைக்கள நிதிக் கூற்றுக்களில் நடைமுறையல்லா சொத்துக்களில் அசைவுகள் தொடர்பான அறிக்கையின் பிரகாரம் அந்த செலவினம் ரூபா 807,076,616 ஆனமையால் ரூபா 107,597,035 இணக்கமின்மை காணப்பட்டது. | உரிய அமைச்சு திணைக்களங்களுக்கு சரிசெய்வதற்காக அறிவிக்கப்பட்டுள்ளது. | மாகாண அமைச்சுக்கள்/ திணைக்களங்களின் நிதிக் கூற்றுக்களின் பெறுமதிகள் மாகாண சபை நிதியத்தின் நிதிக் கூற்றுக்களுடன் இணக்கம் செய்யப்படல் வேண்டும். |

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மாகாண சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் வடமத்திய மாகாண சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி மாகாண சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது கண்டறியப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள், பிரதான உளள்கக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக முகாமைத்துவத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரை

### 1.5.1 தலைப்பு 600 – ஆளுனர் செயலகம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆளுனர் செயலகத்திற்குரிய மோட்டார் வாகனம் 2021 ஆம் ஆண்டில் ஏற்பட்ட விபத்துக்கு உரிய பழுதுபார்த்தலின் பின்னர் வாகனத்தை மீண்டும் பெற்றுக் கொள்ளாமையினால் மீண்டும் பரீட்சிக்கும் போது மின்சார முறைமையில் வழுக்கள் ஏற்பட்டிருந்ததாகவும், அது அந்த விபத்தினால் ஏற்பட்டிருந்ததாகவும் இயந்திர பொறியியலாளர் தீர்மானித்தமையால் அதற்குரிய இழப்பு நட்டம் காப்புறுதி கம்பனியின் மூலம் அறவிட வேண்டியிருந்த போதிலும், 2023 மார்ச் 20 ஆம் திகதி வரையும் காப்புறுதி இழப்பீடு அறவிடப்பாமை மற்றும் உரிய மின்சார முறைமை பழுதுபார்க்கப்படாமையினால் வாகனத்தை பயன்படுத்த முடியாதிருந்தது. அவ்வாறே விபத்து தொடர்பான இழப்பு நட்டம் முழுமையாக காப்புறுதி கம்பனியில் இருந்து அறவிடுதல் அல்லது காப்புறுதி கம்பனி செலுத்தாத பகுதியை சாரதியிடம் இருந்து அறவிடுதல் என்பவற்றுடன் நிதிப் பிரமாணம் 104(4) இன் இறுதி அறிக்கையில் காண்பிக்கப்பட்ட பரிந்துரையும் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை முடிவடைந்த பின்னர் உரிய பரிந்துரையினை அமுல்படுத்துவதற்கும், அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | பரிசோதனை நடவடிக்கைகளை விரைவாக பூர்த்தி செய்து உரிய பரிந்துரைகளை அமுல்படுத்துதல் வேண்டும். |
| (ஆ) | சனாதிபதி செயலாளரின் 2018 ஒக்டோபர் 12 ஆம் திகதிய இலக்கம் PS/CSA/11-18 என்ற அரச செலவின முகாமைத்துவ | கௌரவ ஆளுனருக்கு அறிவித்து வாகனத்தை மீண்டும் பிரதம செயலாளருக்கு | மேற்கூறப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | சுற்றறிக்கையின் பிரகாரம் கௌரவ மாகாண ஆளுனரின் பயன்பாட்டிற்காக ஒதுக்கக் கூடிய வாகனங்களின் எண்ணிக்கை மூன்று ஆக இருந்த போதிலும், வடமத்திய மாகாண ஆளுனரின் பயன்பாட்டிற்காக நான்கு வாகனங்கள் ஒதுக்கப்பட்டிருந்தது. | கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | எடுத்தல் வேண்டும். |
| (இ) | வட மத்திய மாகாண அபிவிருத்தி திட்டத்தில் குறிப்பிடப்பட்ட செயற்திட்டங்களுக்காக மாகாண ஆளுனர் செயலகத்தின் கீழ் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டுள்ளதுடன், அதன் கீழ் மீளாய்வாண்டிற்குரிய ரூபா 260 மில்லியன் ஆன 161 புதிய செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்ட போதும், அந்த செயற்திட்டங்களுக்காக நலனாளிகளை தெரிவு செய்யும் குறிகாட்டிகள் மற்றும் செயற்திட்டங்களின் செயலாற்றல் குறிகாட்டிகள் என்பன தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | ஆளுனர் அலுவலகத்தால் நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன், செயற்திட்டங்களை அமுல்படுத்துகின்ற நிறுவனத்திற்கு உரிய குறிகாட்டிகளை தயாரிப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | நலனாளிகளை தெரிவு செய்வதற்கான குறிகாட்டிகளும் செயற்திட்டங்களின் செயல் முன்னேற்றத்தை பரீட்சிப்பதற்கான செயலாற்றல் குறிகாட்டிகளும் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | நிதி அமைச்சின் செயலாளரின் 2022 ஏப்ரல் 26 ஆம் திகதிய இலக்கம் 03/2022 என்ற தேசிய வரவு செலவு திட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் அத்தியவசியமற்ற செலவினமாக காலம் தாழ்த்தக் கூடிய செலவினங்களை இனங்கண்டு அவற்றை கைவிடுவதற்கோ அல்லது காலந்தாழ்த்தி நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும், நிதி ஆணைக்குழுவினால் 2022 ஆம் ஆண்டிற்காக அங்கீகரிக்கப்பட்ட அபிவிருத்தி திட்டத்தில் உள்ளடக்கப்படாத சமய ஸ்தலங்களை அபிவிருத்தி செய்யவதற்குரிய ரூபா 7,214,950 ஆன 04 செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருந்தது. | இந்த செயற்திட்டங்கள் மாகாண சபை வருமானத்தில் அமுல்படுத்தப்படுவதுடன், அதற்காக கௌரவ ஆளுனரின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. | இலக்கம் 03/2022 என்ற தேசிய வரவு செலவு திட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.5.2 தலைப்பு 610 - பிரதம அமைச்சு மற்றும் வடமத்திய மாகாண சட்டம் மற்றும் சமாதானம், நிதி மற்றும் திட்டமிடல், உள்ளூராட்சி, கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் விசேட செயற்திட்டங்கள், சுற்றுலா, கல்வி, தகவல் தொழிநுட்பம், பொறியியல் நிர்மாணம் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) வடமத்திய மாகாண பிரதம அமைச்சினால் தெரிவு செய்யப்பட்ட 12 பாடசாலைகளில் சூரிய வலு மின்சார முறைமை ஸ்தாபிப்பதற்காக கூட்டுமொத்தமாக ரூபா 10,002,680 தொகை 2020 ஆம் ஆண்டின் போது செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது இரண்டு பாடசாலைகளில் 06 மாதங்கள் முதல் 13 மாதங்கள் வரையாக கால வீச்சில் அந்த முறைமையில் இருந்து மின்சாரம் உற்பத்தி செய்யப்படாமை, மின்பட்டியல் மாதாந்தம் கிடைக்காமை, மொத்த பாடசாலைக்கும் மின்சாரத்தை மேவுகை செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதும், அந்த பாடசலைகளில் வேறு மின்சார மானிகள் ஊடாக மின்சாரம் பயன்படுத்தப்பட்டமை மற்றும் இது தொடர்பான மேற்பார்வை மற்றும் பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டதன் காரணமாக அந்த செயற்திட்டங்களில் இருந்து எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | அதற்குரிய மேற்பார்வை செயற்பாடுகள் நலிவாக இருந்தமையால் மீண்டும் அதிபர்கள் மற்றும் பயிற்சி பெற்ற ஆசிரியர்களின் மூலம் மேற்பார்வை செய்து அறிக்கையை பெற்று முறைமையை நாளதுவரையாக்குவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | முறைமையை சிறந்த நிலைக்கு கொண்டுவருவதற்கு போதியளவான மின்சாரத்தை உற்பத்தி செய்து கொள்வதற்கும் மேற்பார்வையினை மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) திறப்பனை மஹானாம வித்தியாலயத்தின் மூன்று மாடி வகுப்பறை கட்டிடம் மற்றும் ஆரம்ப கற்கை நிலையமொன்றை நிர்மாணிப்பதற்காக 2017 | பொறியியலாளர் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் என்பவர்களை உள்ளடக்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன், | நிறைவேற்றப்படாத வேலைகளுக்காக செலுத்தப்பட்ட முற்பணத்தை விரைவாக அறவிடுவதற்கும், |

| | | | |
|---|---|---|---|
| | மார்ச் 13 ஆம் திகதி ரூபா 41,451,987 தொகையில் உடன்படிக்கை செய்து செயற்திட்டத்திற்காக ஒப்பந்தகாரர் வேலைத் தளத்தை ஸ்தாபித்ததை மேற்பார்வை செய்த பொறியியலாளரின் சான்றிதழ் பெற்றுக்கொள்ளப்படாமல் ரூபா 14,508,196 (வற் உடன்) வேலை ஆரம்பித்தல் முற்பணம் செலுத்தப்பட்டிருந்த போதிலும், ஒப்பந்தகாரரினால் வேலை ஆரம்பிக்கப்படாமல் அந்த செயற்திட்டம் கைவிடப்பட்டிருந்தது. எனினும், இதற்காக ஒப்பந்தகாரரினால் பெறப்பட்ட ரூபா 12,435,596 தொகையான முற்பண பிணைமுறி மற்றும் ரூபா 2,072,600 ஆன செயலாற்றல் பிணைமுறி உரிய காலம் முடிவடைவதற்கு முன் பணமாக்கிக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே இந்த நிர்மாணங்களில் இடமளிப்பதற்காக பயன்பாட்டில் காணப்பட்ட 80′x20′ அளவிலான பாடசாலைக் கட்டிடமும் உடைத்து அகற்றப்பட்டிருந்தது. | அதன் பிரகாரம் மிகுதி நடவடிக்கைகளை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | உரிய செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | திறப்பனை மஹானாம வித்தியாலயத்தின் விளையாட்டரங்கின் கேட்போர் கூடத்தை நிர்மாணிப்பதற்காக ரூபா 4,542,277 தொகையில் 2017 ஆம் ஆண்டின் போது உடன்படிக்கை செய்யப்பட்ட செயற்திட்டம் ரூபா 1,086,085 ஆன செய்த வேலைப் பெறுமதியுடன் பின்னர் நிர்மாணம் கைவிடப்பட்டிருந்தது. | பொறியியலாளர் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் என்பவர்களை உள்ளடக்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன், அதன் பிரகாரம் மிகுதி நடவடிக்கைகளை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | உரிய செயற்திட்டத்தை விரைவாக பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | திறப்பனை மஹானாம வித்தியாலயத்தின் விளையாட்டு மைதானத்துடன் உள்ள காணியை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 5,061,771 பெறுமதியில் 2017 மே 15 ஆம் திகதி உடன்படிக்கை செய்யப்பட்ட ஒப்பந்தத்திற்காக மதிப்பீடு செய்யப்பட்ட அளவினை விஞ்சி மண் மற்றும் கிரவல் வழங்கி அதற்காக மேற்பார்வை பொறியியலாளரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாமல் போக்குவரத்து அமைச்சினால் | பொறியியலாளர் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் என்பவர்களை உள்ளடக்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன், அதன் பிரகாரம் மிகுதி நடவடிக்கைளை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | பெறுகைகள் வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | பிரதம அமைச்சின் நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் அருகில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பதவி மகசேன் மகா வித்தியாலயம், பதவி மகசேன் ஆரம்ப வித்தியாலயம் மற்றும் பதவி பராக்கிரமபுர ஆரம்ப வித்தியாலயம் என்ற பாடசாலைகளில் ரூபா 65,680,724 ஆன 05 நிர்மாண செயற்திட்டங்கள் 2016 ஒக்டோபர் 02 முதல் 2017 பெப்ரவரி 12 வரையான காலத்தில் பூர்த்தி செய்வதற்காக உடன்படிக்கை செய்திருந்த போதிலும். அந்த ஒப்பந்தம் பூர்த்தி செய்யப்படாமல் கைவிடப்பட்டிருந்ததுடன், அதற்காக செலுத்தப்பட்ட தொகை ரூபா 14,304,115 ஆகும். | ஒப்பந்தகாரர் வேலையை பூர்த்தி செய்யாமை தொடர்பாக கலந்துரையாடி சுமுகமான இணக்கப்பாட்டுடன் ஒப்பந்த உடன்படிக்கை பூர்த்தி செய்து மீண்டும் மதிப்பீடு செய்து எதிர்காலத்தில் உரிய பணிகளை நிறைவேற்றுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இந்த சம்பவம் தொடர்பாக ஆரம்ப விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | உரிய செயற்திட்டத்தை விரைவாக பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | மாகாண நிதி விதி 259.2 மற்றும் 259.3 இன் பிரகாரம் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சில் சேமிக்கப்பட்ட கட்டுநிதி அடுத்து வரும் ஆண்டின் சனவரி 10 ஆம் திகதியில் அல்லது மாகாண திறைசேரியினால் நிர்ணயிக்கப்படுகின்ற திகதியில் மீள தீர்க்க வேண்டியிருந்த போதிலும், | இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டமையினால் உரிய முற்பண தொகையை தீர்க்க முடியாதிருந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. | மாகாண நிதி விதியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து கட்டுநிதி தீர்த்து வைக்கப்படல் வேண்டும். |

மீளாய்வாண்டின் நிதிக் கூற்று குறிப்பு 01 இன் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாகாண பிரதம அமைச்சினால் 2012 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டு எனினும் இது வரை தீர்க்கப்படாத கட்டுநிதி மீதி ரூபா 26,405,861 ஆகும்.

### 1.5.3 வடமத்திய மாகாண அபிவிருத்தி நிர்மாண மற்றும் இயந்திர உபகரண முகவராண்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | நிறுவனத்தின் தலைவரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முகவராண்மையின் பதவி அணியினருக்கு உரிய ஆரம்ப நிலையில் 03 பதவிகளில் 06 உத்தியோகத்தர்கள் முகவராண்மைக்கு புறம்பாக மாகாண திணைக்களங்களுக்கு நியமிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்குரியதாக அந்த ஊழியருக்காக முகவராண்மையினால் செலவிடப்பட்ட சம்பளம் மற்றும் படிகளின் செலவினம் ரூபா 3,296,908 ஆகும். | அவ்வப்போது பிரதம அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கையின் படி விடுவிக்கப்பட்டிருந்தனர். | ஏனைய நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்ட முகவராண்மையின் ஊழியர்கள் முகராண்மையின் கடமைகளுக்காக ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | முகவராண்மையின் வாகனங்கள் பழுதுபார்க்கும் பிரிவினால் மீளாய்வாண்டில் ரூபா 22,702,451 உதிரிப்பாகங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், அந்த உதிரிப்பாகங்களை கொள்வனவு செய்தல் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் போட்டியாளர் விலை கோரப்படாமல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | பெறுகைகள் வழிகாட்டியின் பிரகாரம் நிறுவனத்திற்கு ஏற்றமான முறைமையொன்றை விரைவாக தயாரித்து அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. | பெறுகைகள் வழிகாட்டி கோவையின் பிரகாரம் உதிரிப்பாகங்களை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.5.4 தலைப்பு 611 – உள்ளூராட்சி திணைக்களம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | உள்ளூராட்சி நிறுவனங்களில் வேலை நீக்கம் செய்யப்பட்டு 01 வருடம் முதல் 07 வருடங்கள் வரையிலான காலம் கடந்திருந்த 08 உத்தியோகத்தர்களின் ஆரம்ப விசாரணை மற்றும் ஒழுக்காற்று விசாரணை நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | விசாரணை நடவடிக்கைகளை விரைவாக மேற்கொள்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | உரிய விசாரணை நடவடிக்கைகள் விரைவாக பூர்த்தி செய்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் உள்ளூராட்சி திணைக்களத்தால் பெறுகைகள் வழிகாட்டிக் கோவைக்கு இணங்க போட்டியாளர் விலை கோராமல் தனிப்பட்ட கேள்வியின் அடிப்படையில் அரச வணிக கூட்டுத்தாபனத்தில் இருந்து ரூபா 8,420,602 பெறுமதியான அலுவலக உபகரணங்கள் மற்றும் கணனி துணைப்பாகங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இதன் போது அந்த பொருட்களின் விலைகள் சந்தையின் விலைகளுடன் ஒப்பிடும் போது 100 சதவீதம் 154 சதவீதம் ஆன உயர்ந்த பெறுமதியை கொண்டிருந்தது. இந்த கொள்வனவு செயற்பாடுகளின் போது பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிகாரம் கட்டம் கட்டமாக பின்பற்றப்பட வேண்டிய வழிகாட்டிகளும் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. | பணிப்பாளர் சபை தீர்மானத்தின் பிரகாரம் (மத்திய அரசு) விநியோகித்துள்ள மாகாண திறைசேரி சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பெறுகைகள் வழிகாட்டி கோவையை பின்பற்றுதல் மற்றும் மாகாண சபை நிதியத்தினை விட பொருளாதார நலன்களை பெறும் வகையில் கொள்வனவு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | உள்ளூராட்சி திணைக்களத்தின் உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கில் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 12 வருடங்களை விஞ்சிய அறவிடப்படாது காணப்படுகின்ற 15 ஊழியர் கடன்களின் கூட்டுமொத்தம் ரூபா 1,458,814 ஆக இருந்தது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | நிலுவை கடன் மீதியை விரைவாக தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.5 தலைப்பு 612 - மாகாண கல்வித் திணைக்களம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 மே 24 ஆம் திகதிய இலக்கம் 07/2018 என்ற அரச நிர்வாக சுற்றறிக்கையின் 10(i) உப பிரிவின் பிரகாரம் ஓய்வூதிய கோவை சரியாக தயாரித்து உரிய உத்தியோகத்தர் ஓய்வு பெறுகின்ற திகதியில் அல்லது அதற்கு பின்னர் ஒரு வாரத்திற்குள் உரிய பிரதேச செயலகத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும், வட மத்திய மாகாண கல்வித் திணைக்களத்தால் 88 ஆசிரியர்களின் ஓய்வூதிய கோவை பிரதேச செயலகத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தாமதம் ஏற்பட்டுள்ளதுடன், எதிர்காலத்தில் தாமதத்தை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | 2018 மே 24 ஆம் திகதிய இலக்கம் 07/2018 என்ற அரச நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மாகாண கல்வித் திணைக்களத்திற்குரிய 811 பாடசாலைகளில் 2022 ஆம் ஆண்டின் போது கோட்ட மற்றும் வலய அலுவலகங்கள் மூலம் மேற்பார்வை செய்யப்பட்ட பாடசாலைகளின் எண்ணிக்கை 376 மாத்திரம் ஆகும். மேற்பார்வைக்கு உட்படுத்தப்பட்ட பாடசாலைகளிலும் 114 பாடசாலைகள் தர குறிகாட்டிகளின் மதிப்பீடு 60 சதவீதத்தை விட குறைவான சாதாரண செயலாற்றல் மட்டத்தில் காணப்பட்டது. | பாடசாலை நடைபெற்ற நாட்கள் எண்ணிக்கை குறைவடைந்தமை பாடசாலை பதவி அணியினர் பற்றாக்குறை போன்ற காரணங்களினால் தாக்கமளித்திருந்ததுடன், மாணவர் செயலாற்றல் இலக்கிடப்பட்ட வழிகாட்டி தயாரித்து அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | 2014 திசெம்பர் 02 ஆம் திகதி 31/2014 ஆம் இலக்க பாடசாலை கல்வியின் தரத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கான மதிப்பீட்டு சுற்றறிக்கை மற்றும் ஆலோசனை கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | தேசிய மட்டத்தில் பாடசாலை மாணவர்களுக்காக நடாத்தப்படுகின்ற க.பொ.த. (சா.தரம்) மற்றும் உயர்தர பரீட்சை பெறுபேறுகள் ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடும் போது வடமத்திய மாகாணம் 09 ஆவது இடத்தில் காணப்பட்டது. | 2016 முதல் 2020 வரை சீராக அதிகரிப்பொன்று காணப்பட்டது. 2022 ஆம் ஆண்டில் இலக்கிடப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் 2023 ஆம் ஆண்டின் போது அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | தேசிய மட்டத்தில் பரீட்சைகளின் பெறுபேறுகளை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | வலய கல்வி அலுவலகங்களின் 07 அதிகார பிரதேசத்திற்கு உரிய 586 பாடசாலைகளில் காணப்படுகின்ற 1399 ஆன ஆசிரியர் மற்றும் அதிபர் உத்தியோகபூர்வ இல்லங்களில் 810,471 சதுர அடி அளவான 947 உத்தியோகபூர்வ விடுதிகள் பழுதுபார்க்கக் கூடிய நிலைமையிலும், 146,976 சதுர அடி அளவான 183 உத்தியோகபூர்வ இல்லங்கள் பயன்படுத்துவதற்கு பொருத்தமற்ற நிலையிலும் காணப்படுவதுடன், அந்த உத்தியோகபூர்வ இல்லங்களில் 908 இல் எந்தவொரு குடியிருப்பாளரும் இல்லாததன் காரணமாக பயன்பாடின்றி காணப்பட்டது. | வருடாந்தம் திருத்த நடவடிக்கைகளுக்காக வழங்கப்படுகின்ற நிதி ஏற்பாட்டின் வரையரையின் காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. | தேவையினை இனங்கண்டு உத்தியோகபூர்வ இல்லங்களை திருத்தியமைத்து குடியிருப்பதற்காக வழங்குதல் வேண்டும். |
| (உ) | 1985 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையான காலத்தில் வலயக் கல்வி அலுவலகங்களில் 06 அதிகார பிரதேசத்தில் 49 பாடசாலைகள், பல்வேறு காரணங்களினால் மூடப்பட்டிருந்ததுடன், பாடசாலைகளில் 115,800 சதுர அடி அளவான 110 பாடசாலை கட்டிடங்களும் 21 ஆசிரியர் விடுதிகளும் மற்றும் 01 அதிபர் விடுதியும் காணப்பட்டிருந்ததுடன், மூடப்பட்டிருந்த பாடசாலைகளின் நில அளவு 122.75 ஏக்கர் ஆகும். | மூடப்பட்ட பாடசாலைகள் உரிய பிரதேச செயலாருக்கு முறையாக கையளிப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | நிரந்தரமாக மூடப்படுகின்ற பாடசாலை கட்டிடங்கள் மற்றும் காணிகள் அரசாங்கத்தின் ஏனைய அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு ஈடுபடுத்துவதற்கு முடியுமான வகையில் பிரதேச செயலாளருக்கு கையளிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | வட மத்திய மாகாண பாடசாலைகளுக்கு நியமிக்கப்பட்டுள்ள அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களில் 63 பேர்கள் 02 மாதங்கள் முதல் 32 வருடங்கள் வரையிலான கால வீச்சில் இருந்து ஏனைய நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன், அந்த விடுவிக்கப்பட்ட ஆசிரியர்களில் 61 பேர்களுக்காக விடுவிக்கப்பட்ட திகதியில் இருந்து மீளாய்வாண்டின் இறுதி வரையிலும், உரிய உத்தியோகத்தரின் சேவையாற்றல் அறிக்கை, சேவைக்கு அறிக்கையிடல், வருகை மற்றும் வெளிச்செல்லல், விடுமுறை போன்றவை தொடர்பான தகவல்கள் மற்றும் விடுவிக்கப்பட்ட நிறுவனங்களில் இருந்து பெறப்பட்ட படிகள் தொடர்பான தகவல்களை உறுதிப்படுத்தாமல் வலய கல்வி அலுவலகத்தால் அந்த உத்தியோகத்தர்களுக்கு உரியதாக செலுத்தப்பட்ட சம்பளம் மற்றும் படிகளின் கூட்டுமொத்தம் ரூபா 257,490,892 ஆகும். | சம்பளத்தை மீளளிப்பு செய்யுமாறு உரிய நிறுவனங்களுக்கு கோரிக்கை விடப்பட்டுள்ளது. | உரிய ஆசிரியர்கள் பாடசாலைக்கு நியமிக்கும் போதும், சம்பளத்தை செலுத்தும் போதும் போதியளவான உறுதிப்படுத்தல் பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும். |
| (எ) | வலய கல்வி அலுவலகங்களுக்கு அதிபர்களினால் வழங்கப்பட்ட மீளாய்வாண்டின் இறுதி 04 மாதங்களுக்குரிய நான்கு மாத அறிக்கையின் பிரகாரம் 318 பாடசாலை அபிவிருத்தி சங்கக் கணக்குகளில் ரூபா 100,000 இற்கு மேற்பட்ட பணம் காணப்படுவதுடன், அந்த பாடசாலை அபிவிருத்தி சங்கங்களில் மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட பணத்தின் கூட்டுப்பெறுமதி ரூபா 153,191,866 ஆகும். அது தொடர்பாக வலய கல்வி அலுவலகத்தால் உரிய மேற்பார்வையொன்று மேற்கொள்ளப்படாதிருந்ததுடன், 81 பாடசாலைகளில் 2022 ஆம் ஆண்டின் இறுதி 04 | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டத்தின் போது இது தொடர்பாக கலந்துரையாடப்பட்டுள் ளதுடன், வலய கல்வி பணிப்பாளருக்கு இது தொடர்பாக தனிப்பட்ட ரீதியில் மேற்பார்வை செய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. | 2018 யூன் 22 ஆம் திகதிய 26/2018 ஆம் இலக்க கல்வி அமைச்சின் செயலாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து இந்த பணத்தை உரிய பணிகளுக்காக பயன்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மாதங்களுக்குரிய நான்கு மாத அறிக்கை வலய கல்வி அலுவலகத்திற்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஏ) | பதவியில் உள்ளவரின் தகுதிகாண் காலம் முடிவடையும் போது அவர் சேவையில் நிரந்தரமாக்குவதற்கோ அல்லது அவர்களின் தகுதிகாண் காலத்தை நீடிப்பதற்கோ அல்லது தகுதிகாண் நியமனத்தை முடிவுறுத்துவதற்கோ திணைக்கள தலைவர் கண்காணிக்க வேண்டியிருந்த போதிலும், வடமத்திய மாகாணத்தில் அமைந்துள்ள பாடசாலைகளில் 1989 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் ஆசிரிய சேவைக்கு நியமிக்கப்பட்ட 313 ஆசிரியர் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சேவையில் நிரந்தரமாக்குவதற்குரிய நடவடிக்கைகள் கல்விப் பணிப்பாளரினால் மேற்கொள்ளப்படுகின்றது. | உரிய ஆசிரியர்களை விரைவாக நிரந்தரமாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் . |
| (ஐ) | 290 பாடசாலைகளுக்கு உரிய தரமுள்ள அதிபர்கள் நியமிக்கப்படாமையின் காரணமாக ஆசிரியர் சேவைக்குரிய ஆசிரியர்கள் அதிபர் கடைகளை நிறைவேற்றுவதற்கு பதிற்கடமை பதவி வழங்கப்பட்டிந்த போதிலும், 122 பாடசாலைகளில் தரமுள்ள அதிபர்கள் பிரதி அதிபர் பதவியில் கடமைகளை நிறைவேற்றுகின்றர். | அதிபர் பதவிகளில் காணப்பட்ட வெற்றிடங்களை மேவுகை செய்வதற்காக சேர்க்கப்பட்துடன், 05 வருடங்களை விட மேற்பட்ட காலம் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள இந்த பதிற்கடமை அதிபர்களுக்கு பதிலாக தரமுள்ள அதிபர்களை ஈடுபடுத்துதல் பிரச்சினையாக இருந்தது. | தரம் பெற்ற அதிபர்களுக்கு அதிபர் பதவிகள் வழங்கப்பட வேண்டும். |
| (ஒ) | 07 வலயக் கல்வி அலுவலகங்களின் பாடசாலைகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட பாடசாலை பணி உதவியாளர், ஆய்வு கூட உதவியாளர் மற்றும் | வலய கல்வி அலுவலகங்களின் பதவி அணியினரை திருத்துமாறு கோரப்பட்ட போதும் முகாமைத்துவ | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையை மீண்டும் மீளாய்வு செய்து பதவிகளுக்காக |

| | | | |
|---|---|---|---|
| | காவலாளிகளின் எண்ணிக்கை முறையே 359 பேர், 56 பேர் மற்றும் 270 பேர்களாக இருந்த போதும் அதன் கீழ் மீளாய்வாண்டின் இறுதி வரையில் மிகையான பதவி அணியினர் முறையே 219 பேர், 61 பேர் மற்றும் 136 பேர்களாக இருந்தனர். இந்த மிகையான பதவியணியிருக்காக மீளாய்வாண்டிற்காக செலுத்தப்பட்ட ஊழியர் சம்பளம் மற்றும் படிகள் ரூபா 239,800,292 ஆகும். | சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை . | மீண்டும் நியமிக்க வேண்டியிருந்ததுடன், மிகை ஊழியர்களின் வெற்றிடம் காணப்படுகின்ற ஏனைய நிறுவனங்களுக்கு அனுப்பப்படுதல் வேண்டும். |
| (ஓ) | மாகாண கல்வித் திணைக்களத்தால் மீளாய்வாண்டின் போது அலகொன்று ரூபா 173,300 வீதம் 05 கணனிகள் பெறுகைகள் வழிகாட்டியினை பின்பற்றாமல் ரூபா 866,500 தொகையில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இதற்காக கட்டளையிடப்பட்ட கணனிகளின் இயலளவு (மத்திய செயற்பாட்டு அலகு – CPU) i5 ஆக இருந்த போதும், பெறப்பட்ட கணனிகளில் அந்த இயலளவு i3 அளவாக இருந்தது. எனினும், தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவினால் பெறப்பட்ட கணனிகளில் இயலளவு i5 ஆக அறிக்கையிடப்பட்டிருந்தது. | வழங்கல் நிறுவனம் வழங்கிய கணனிகளின் இயலளவு i3 அளவாக இருந்தமை ஏற்றுக் கொள்ளப்பட்டதுடன், கணனியினை மாற்றி குறித்த இயலளவை உடைய கணனி வழங்குவதற்கு இணங்கப்பட்டிருந்தது. | உரிய சம்பவம் தொடர்பான உத்தியோகத்தர்களுக க்காக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.6 தலைப்பு 620 - மாகாண விவசாய, விவசாய உற்பத்தி சந்தைப்படுத்தல், கால்நடை உற்பத்தி மற்றும் கால்நடை சுகாதார மற்றும் மீன்பிடி அலுவல்கள் அமைச்சு

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மாகாண விவசாய அமைச்சின் அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பண கணக்கில் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 12 வருடங்களை விஞ்சிய அறவிடப்படாது காணப்படுகின்ற ஒரு ஊழியரின் கடன் மீதி ரூபா 104,665 ஆகும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | நிலுவை கடன் மீதியை விரைவாக தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மாகாண நிதி விதி 259.2 மற்றும் 259.3 இன் பிரகாரம் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சில் சேமிக்கப்பட்ட கட்டுநிதி மீதியில் அடுத்து வரும் ஆண்டின் சனவரி 10 ஆம் திகதியில் அல்லது மாகாண திறைசேரியினால் குறித்துரைத்த திகதியில் தீர்க்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் நிதி கூற்று குறிப்பு 01 இன் பிரகாரம் 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு மாகாண விவசாய அமைச்சின் தீர்த்து வைக்கப்படாத கட்டுநிதி மீதி ரூபா 1,072,848 ஆகும். | இந்த செயற்திட்டத்தை செய்கின்ற போது முன்னர் காணப்பட்ட பயங்கரவாத செயற்பாடுகளின் காரணமாக செயற்திட்டம் நிறுத்தப்பட்டு வேறொரு இடத்திற்கு மாற்றப்பட்டமையால் உரிய ஒப்பந்தகாரருக்கு இந்த செயற்திட்டத்தை செய்து கொள்வதற்கு முடியாதிருந்ததால் வேலைகள் இடைநடுவே நிறுத்தப்பட்டமையால் இந்த பணத்தை அறவிடுவதற்கு முடியாதிருந்தது. | மாகாண நிதி விதியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து கட்டுநிதி தீர்க்கப்படல் வேண்டும். |

### 1.5.7 தலைப்பு 621 மாகாண விவசாய திணைக்களம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 யூன் மாதத்தின் போது வேலை பூர்த்தி செய்யப்பட்ட ஆராய்ச்சி கூட கட்டிடத்திற்காக மாகாண விவசாய திணைக்களத்தால் ரூபா 27,358,427 செலவினம் செய்யப்பட்டிருந்த போதும், எதிர்பார்க்கப்பட்ட பிரகாரம் போதியளவான ஆராய்ச்சி பணிகளுக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | ஆராய்ச்சி கூடத்திற்கு தேவையான உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதும், கொள்வனவுகள் கைவிடப்பட்டதன் காரணமாக பயன்படுத்த முடியாதிருந்தது. | உரிய உபகரணங்களை கொள்வனவு செய்து ஆராய்ச்சி கூடத்தை விரைவாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மாகாண விவசாய திணைக்களத்தின் அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பண கணக்கில் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 12 வருடங்களை விஞ்சிய அறவிடப்படாது காணப்படுகின்ற ஊழியர் கடன் மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 194,958 ஆகும். | விடயங்கள் தெளிவுபடுத்தப்படவில்லை. | நிலுவை கடன் மீதி விரைவாக தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.8 தலைப்பு 631 – மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) நாச்சியாதீவு சுகாதார மருத்துவ அலுவலகத்தை நிர்மாணிப்பதற்காக ரூபா 643,038,725 தொகையின் ஒப்பந்தத்திற்கு உரிய ரூபா 12,660,000 ஆன வேலை ஆரம்பித்தல் முற்பணம் 2021 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்ட போதும், உரிய செயற்திட்டம் அமுல்படுத்தாமையின் காரணமாக ஒப்பந்தகாரருக்கு செலுத்தப்பட்ட முற்பணத்தில் மேலும் அறவிட வேண்டிய தொகை ரூபா 2,660,000 ஆகும். | இது தொடர்பாக வங்கியுடன் நீதிமன்ற நடவடிக்கைகள் காணப்படுகின்றமையால் அதன் பின்னர் நடவடிக்கை எடுக்கப்படும். | முற்பணத்தை மீள அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) 2019 திசெம்பர் 22 ஆம் திகதி விபத்துக்கு உட்பட்டிருந்த பொலன்னறுவை பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்குரிய நோயாளர் காவும் வண்டியை பழுதுபார்ப்பதற்காக ரூபா 8,500,000 செலுத்தப்பட்டிருந்த போதும், முழுமையான காப்புறுதி மேவுகை உரித்தான இந்த வாகனத்திற்குரிய காப்புறுதி உரித்து பெறப்பட்டிருக்கவில்லை. | உரிய உத்தியோகத்தருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | காப்புறுதி இழப்பீட்டை அறவிடுவதற்கும் ஒழுக்காற்று நடவடிக்கைகளை விரைவுபடுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பண கணக்கில் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 12 வருடங்களை விஞ்சி அறவிடப்படாது காணப்படுகின்ற 27 ஊழியர் கடன்களின் கூட்டுமொத்தம் ரூபா 2,987,320 ஆகும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | நிலுவை கடன் மீதிகளை விரைவாக தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.9 தலைப்பு 632 – மாகாண ஆயர்வேத திணைக்களம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மின்னேரி ஆயர்வேத வைத்தியசாலையில் இலங்கையர்களுக்கும் வெளிநாட்டவர்களுக்கும் சேவை வழங்கும் நோக்கில் ரூபா 23,618,102 செலவினத்தை செய்து 2017 ஒக்டோபர் வரையில் வேலை பூர்த்தி செய்யப்பட்ட மின்னேரி பஞ்சகர்ம பிரிவு மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் பயனற்று காணப்பட்டது. | தேவையான உபகணரங்களை பெற்று பதவி அணியினரை நியமித்து உடனடியாக ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தாமதம் இன்றி இலக்கிடப்பட்ட பணிகளுக்காக ஈடுபடுத்துதல் வேண்டும். |

### 1.5.10 தலைப்பு 640 - மாகாண கூட்டுறவு, வியாபார மற்றும் உணவு, போக்குவரத்து, விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் அலுவல்கள் மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வடமத்திய மாகாண மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் வருமான அனுமதிப் பத்திரம் விநியோகிக்கும் முறைமையில் உள்ளடங்கியுள்ள மோசடிகளை கடந்த ஆண்டின் வருமான அனுமதிப் பத்திரம், புகை பரிசோதனை சான்றிதழ், காப்புறுதி சான்றிதழ் இன்றி வருமான அனுமதிப் பத்திரம் விநியோகித்தல், விநியோகிக்கப்பட்ட அனுமதிப் பத்திரங்களுக்குரிய தகவல்கள் அழிக்கப்பட்டமை, மாற்றப்பட்டமை, நிலுவை வருமானம் அழிக்கப்பட்டமை போன்றவை மூலம் வாகன வருமான அனுமதிப் பத்திர வருமான மோசடி செய்யக் கூடிய இயலுமை காணப்பட்டது. அவ்வாறான குறைபாடுகளை இனங்கண்டு சரிசெய்வதற்கு இந்த முறைமை வட மத்திய மாகாண மோட்டார் போக்குவரத்து திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ள இலங்கை தகவல் மற்றும் தொலைத்தொடர்பு தொழில்நுட்ப முகவராண்மையினால் தவறவிடப்பட்டிருந்தது. | ER-2 நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்திய பின்னர் இந்த குறைபாடுகள் சரிசெய்யப்படும். | விரைவாக குறைபாடுகளை சரிசெய்து உள்ளக கட்டுப்பாட்டு செயற்பாடுகளை வலுப்படுத்துதல் வேண்டும். |

### 1.5.11 வடமத்திய மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து சேவை அதிகாரசபை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | நிறுவனத்தின் தலைவரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அதிகார சபையின் சேவைக்கு சேர்க்கப்பட்டு உரிய ஆட்சேர்ப்பு நடைமுறைகள் மற்றும் உள்ளக பரீட்சைகளை நடாத்துவதற்குரிய பரீட்சை நடைமுறைகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தயாரித்து அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக பரீட்சைகளை நடாத்தாமல் சம்பள அதிகரிப்பு செலுத்துதல் மற்றும் சேவையில் நிரந்தரமாக்கல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்துடன் கலந்துரையாடி ஆட்சேர்ப்பு நடைமுறைகளை அங்கீகரித்துக் கொள்ளும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | ஆட்சேர்த்தல் நடைமுறைகள் உரிய நிறுவனத்தில் இருந்து அங்கீகரித்து கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அநுராதபுரம் புதிய பேரூந்து நிலைய கடைகளுக்காக ரூபா 5,934,350 தொகையும் தூர சேவை பேரூந்து நிலைய கடைகளுக்காக ரூபா 656,512 தொகையும் மற்றும் கெக்கிராவ பேரூந்து நிலைய கடைகளுக்காக ரூபா 2,422,991 தொகையும் ஆக ரூபா 9,013,853 நிலுவை கடை வாடகை வருமானம் காணப்பட்டது. | நிலுவையினை அறவிடுவதற்கு முறையான நடவடிக்கை பின்பற்றப்படுகின்து. | நிலுவை கடை வாடகையை விரைவாக அறவிடல் வேண்டும். |
| (இ) | அதிகாரசபைக்குரிய மதவாச்சி பேரூந்து நிலைய நுழைவாயிலில் 08 நிலக் கூறுகள் 2020 யூன் மாதம் 06 ஆம் திகதி முதல் 20 வருட காலத்திற்காக வாடகைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், இந்த வாடகையாளர் தெரிவு செய்யப்பட்ட அடிப்படை மற்றும் அதற்காக பணிப்பளார் சபை அங்கீகாரம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | பேரூந்து நிலையத்தில் கட்டிடங்களை நிர்மாணத்தில் தொடர்பாக கடை உரிமையாளர்களின் எதிர்ப்பின் காரணமாக தற்போது இந்த நிர்மாணங்கள் கைவிடப்பட்டுள்ளது. | கேள்வி நடைமுறைகளை பின்பற்றி அதிகாரசபைக்கு உச்ச அளவிலான வருமாத்தை பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் கடைகளை வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.12 வடமத்திய மாகாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | நிறுவனத்தின் தலைவரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2003 இன் 02 ஆம் இலக்க வடமத்திய மாகாணத்தின் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை விஞ்ஞாபனத்தின் 05(இ) பிரிவின் பிரகாரம் மாகாணத்தின் சகல புதிய மற்றும் தற்போது நடத்திச் செல்லப்படுகின்ற கைத்தொழிலாளர்கள் அதிகாரசபையில் பதிவுசெய்ய வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் போது அநுராதபுரம் மாவட்டத்தில் 104 கைத்தொழிலாளர்கள் பதிவு செய்திருந்ததுடன், பொலன்னறுவை மாவட்டத்தில் எந்தவொரு கைத்தொழிலாளர்களையும் பதிவுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பொலன்னறுவை மாவட்டத்தில் கைத்தொழிலாளர்களை பதிவு செய்வதற்காக முயற்சி எடுக்கப்பட்டிருந்ததுடன், எதிர்காலத்தில் கிடைக்கின்ற நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் மிகுதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | மாகாணத்தை மேவுகை செய்யும் வகையில் நிகழ்ச்சித் திட்டங்கள் அமுல்படுத்தப்படல் வேண்டும். |
| (ஆ) | வடமத்திய மாகாண கூட்டுறவு வர்த்தக மற்றும் உணவு, கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சின் மூலம் அமுல்படுத்தப்படுகின்ற சிறிய அளவிலான தொழில்முயற்சியாளர்களின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையால் மாகாணத்தில் பதிவு செய்த 49 கைத்தொழிலாளர்களுக்கு மீளாய்வாண்டில் ரூபா 4,825,000 கடன் வழங்கப்பட்டிருந்தது. அதில் 17 கடன் பெறுனர் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் | குறித்துரைத்த விடயங்கள் தெளிவுபடுத்தப்படவில்லை. | போதியளவான பிரகாரம் உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர் கடன் வழங்கல் மேற்கொள்ள வேண்டியிருந்ததுடன் பின்னர் தொடர்ச்சியாக பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

பரிசோதனையின் பிரகாரம் ரூபா 100,000 வீதம் கடன் பெற்ற 06 கடன் நலனாளிகளிடம் இருந்து வியாபாரங்கள் 2023 சனவரி மாதம் வரையில் செயலிழந்து காணப்பட்டதுடன், மேலும் கடன் நலனாளிகள் நான்கு பேர்கள் போலியான சான்றிதழ் சமர்ப்பித்து ரூபா 375,000 கடன் வசதிகள் பெற்றிருந்தனர்.

### 1.5.13 தலைப்பு 641 – மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | 2012 ஆம் ஆண்டின் போது தயடகிருல கண்காட்சிக்கு இணையாக ரூபா 190 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்ட விலச்சிய பல்நோக்கு சேவை கூட்டுறவு சங்கத்தின் அரிசி வழங்கல் நிலையம் செயலிழந்து காணப்பட்டமையின் காரணமாக அதனை செயற்படு நிலைக்கு கொண்டுவருவதற்கு மாகாண கூட்டுறுவு திணைக்களத்தால் மீளாய்வாண்டின் போது ரூபா 3,038,000 செலவில் கொள்வனவு செய்யப்பட்ட இயந்திர உபகரணங்களையும் பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன், இந்த செயற்திட்டத்தை ஆரம்பித்து நடாத்திச் செல்வதற்கு அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் நியமிக்கப்படாதிருந்தமையால் அந்த செயற்திட்டம் மேலும் செயலிழந்த நிலைமையில் காணப்பட்டது. | விலச்சிய பல்நோக்கு சேவை கூட்டுறவு சங்கத்தினால் மேலும் கொள்வனவு செய்ய வேண்டிய உபகரணங்களுக்காக கடன் தொகை கோரப்பட்டுள்ளதுடன், அதன் பிரகாரம் மிகுதி உபகரணங்கள் கொள்வனவு செய்ததன் பின்னர் இயந்திரத்தை பொருத்தும் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் நிதிஏற்பாட்டின் அடிப்படையில் ரூபா 1,072,840 செலவினத்தை செய்து 2021 ஆம் ஆண்டின் போது நவீனமயப்படுத்தப்பட்ட தம்பெலச கூட்டுறவு பிரதேசத்தின் கட்டிடம் நிர்மாணங்களில் காணப்படுகின்ற நலிவுகளினால் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் கைவிடப்பட்டிருந்தது. | கூட்டிக் காட்டப்பட்ட குறைபாடுகள் கூட்டுறவு சங்கங்களின் மூலம் சரிசெய்து எதிர்காலத்தில் வியாபார நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும். | எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) | கூட்டுறவு ஊழியர் ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நலன் உத்தேச திட்டத்திற்குரிய ஓய்வூதிய நிதியத்திற்காக வருடாந்தம் கூட்டுறவு சங்கத்தின் பங்களிப்பு ரூபா 7,776,000 மற்றும் மாகாண சபை நிதியத்தில் இருந்து வருடாந்தம் கிடைக்கின்ற ரூபா 10,000,000 தொகையுடன் வருடாந்த பெறுவனவு ரூபா 17,776,000 ஆகும். எனினும், நிதியத்தில் ஊழியர் நலனாளிகள் நலன் பெறுவனர் 560 பேர்களுக்காக வருடாந்த செலுத்த வேண்டிய ஓய்வூதிய செலவினம் ரூபா 25,691,016 ஆனமையால் நிதியத்தின் எதிர்கால இருப்பு நிச்சியமற்றதாக இருந்தது. எனினும் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்குரிய நலனாளிகளுக்காக ஓய்வூதியமாக மேலும் செலுத்த வேண்டிய தொகை ரூபா 17,791,403 ஆகும். | அநுராதபுரம் மற்றும் பொலன்னறுவை மாவட்டங்களில் கூட்டுறவு முகவர்களுடன் கலந்துரையாடல் நடாத்தப்பட்டுள்ளதுடன், கூட்டுறவு சங்கங்களில் இருந்து கிடைக்கின்ற பதிலின் பிரகாரம் மிகுதி நடவடிக்கைகளை எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | கூட்டுறவு ஊழியர் ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நலன் உத்தேச திட்டத்தை மீண்டும் மீளாய்வு செய்து வருடாந்தம் நலன்கள் செலுத்தக் கூடிய வகையில் நிதியத்தை முகாமைத்துவம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2009 இன் 05 ஆம் இலக்க கூட்டுறவு விஞ்ஞாபனத்தின் 58(2) ஆம் பிரிவின் பிரகாரம் பதிவு செய்தல் தாமதமாகிய கூட்டுறவு சங்கங்கள் தொடர்பான பிரச்சினைகளை தீர்ப்பதற்காக பதிவாளருக்கு கிடைக்கின்ற முறைப்பாடுகள் தொடர்பாக அவர்களினால் நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும், 1997 முதல் 2020 காலத்தில் வடமத்திய | 2021 ஆம் ஆண்டு வரை காணப்பட்ட தாமதமான கோவைகளுக்கிடையே போதியளவான கோவைகளின் அளவொன்று தொடர்பில் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், மிகுதி கோவைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | 2009 இன் 05 ஆம் இலக்க கூட்டுறவு விஞ்ஞாபனத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மாகாண கூட்டுறவு ஆணையாளர்/ பதிவாளருக்கு கிடைக்கப்பெற்ற 31 முறைப்பாடுகள் தொடர்பான நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. இந்த முறைப்பாடுகள் தொடர்பாக முறைப்பாட்டாளர்களினால் மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தில் வைப்புச் செய்யப்பட்டுள்ள தொகை ரூபா 1,113,342 ஆகும். | | |
| (உ) | கணக்காண்டு முடிவடைந்து 03 மாதங்களுக்குள் கூட்டுறவு சங்கங்களின் நிதிக் கூற்றுக்கள் கணக்காய்விற்காக கூட்டுறவு ஆணையாருக்கு சமர்ப்பிக்க வேண்டிய போதிலும், அநுராதபுரம் மற்றும் பொலன்னறுவை மாவட்டங்கள் இரண்டிலும் 05 கூட்டுறவு சங்கங்களில் 33 கணக்குகள் குறித்துரைத்த காலப்பகுதியில் கணக்காய்விற்காக கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அந்த தாமத காலம் 01 வருடம் முதல் 09 வருடங்கள் வரையான வீச்சினை கொண்டிருந்தது. அவ்வாறு 2013 ஆம் ஆண்டு முதல் 2021 வரையான காலத்தில் கிடைக்கப் பெற்ற 09 சங்கங்களுக்குரிய 29 கணக்குகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் கணக்காய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | போதியளவான விடயங்கள் தெளிவுபடுத்தப்படவில்லை. | கணக்குகளை குறித்துரைத்த திகதிக்கு முன்னர் பெற்று காலரீதியில் கணக்காய்வு மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஊ) மாகாண கூட்டுறவு திணைக்களத்தின் அரசாங்க உத்தியோகத்தர்களின் கணக்கில் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 12 வருடங்களை விஞ்சிய அறவிடப்படாது காணப்படுகின்ற 02 ஊழியர் கடன் மீதிகளின் கூட்டு மொத்தம் ரூபா 137,899 ஆகும். | விடயங்கள் தெளிவுபடுத்தப்படவில்லை. | முற்பண கணக்குகளின் நிலுவை பணத்தை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.14 தலைப்பு 642 - மாகாண கைத்தொழில் அபிவிருத்தி திணைக்களம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாகாண கைத்தொழில் திணைக்களத்திற்கு சொந்தமான கடைகள் முறையான உடன்படிக்கை இன்றி வாடகைக்கு வழங்கியதால் 2022 ஆகஸ்ட் 30 இல் உள்ளவாறு 34 நபர்களிடம் இருந்து அறவிட வேண்டிய கடை வாடகை மற்றும் தண்டப்பணம் ரூபா 1,914,365 ஆகும். அதில் ரூபா 549,900 தொகை 2019 ஏப்ரல் மாதத்திற்கு முன்னர் இருந்து கொண்டுவரப்படுகின்ற மீதியாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் ஆகஸ்ட் 30 இல் உள்ளவாறு 09 தகர கடைகளில் இருந்து ரூபா 437,950 தொகை அறவிட வேண்டி காணப்பட்டதுடன், அந்த நிலுவை பணத்தை அறவிடுவதற்காக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக கடை உரிமையாளர்கள் கௌரவ ஆளுனருக்கு முறைப்பாடு சமர்ப்பித்துள்ளதுடன், அந்த தீர்மானத்தின் அடிப்படையில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | முறையான உடன்படிக்கையில் கைச்சாத்திட்டல் மற்றும் நிலுவை பணத்தை அறவிடுவதற்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.15 தலைப்பு 650 - மாகாண காணி, நீர்ப்பாசன, பெருந்தெருக்கள், வீடமைப்பு, கிராம அபிவிருத்தி மற்றும் மகளிர் அலுவல்கள் அமைச்சு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாகாண நிதி விதி 259.2 மற்றும் 259.3 இன் பிரகாரம் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சில் சேமிக்கப்பட்ட கட்டு நிதி மீதியில் அடுத்து வரும் ஆண்டின் சனவரி 10 ஆம் திகதியில் அல்லது மாகாண திறைசேரியால் நிர்ணயிக்கப்படுகின்ற | ஏரியாகம தச்சு பயிற்சி பாடசாலையில் விடுதியை நிர்மாணிப்பதற்காக முற்பணமாக செலுத்தப்பட்ட ரூபா 302,158 தீர்க்கப்படாத முற்பணமாக | மாகாண நிதி விதியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து கட்டுநிதி மீதி தீர்த்து வைக்கப்படல் |

| | | |
|---|---|---|
| திகதியொன்றில் மீள செலுத்த வேண்டியிருந்த போதும், மீளாய்வாண்டின் நிதிக் கூற்று குறிப்பு 01 இன் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாகாண நீர்பாசன அமைச்சினால் 2007 ஆம் ஆண்டின் போது பெறப்பட்ட எனினும் இது வரை தீர்த்து வைக்கப்படாத கட்டுநிதி மீதி ரூபா 302,158 ஆகும். | இருந்தமையும், அவ்வப்போது அமைச்சின் விடயப்பரப்பில் மாற்றப்பட்டமையால் இந்த தொகையை அறவிடுவதற்கு முடியாதிருந்தது. | வேண்டும். |

### 1.5.16 மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | நிறுவனத்தின் தலைவரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் போது மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அபிவிருத்தி திட்டத்தில் உள்ளடக்கப்படாத மீதிகளை பராமரிப்பதற்காக கொள்வனவு செய்வதற்கு திட்டமிடப்பட்ட ரூபா 61.97 மில்லியன் மூலப் பொருட்கள் கொள்வனவு மேற்கொள்ளப்படாதிருந்ததுடன், அதிகாரசபையின் பிரதேச பொறியியலாளர் அலுவலகத்தின் மூலம் நிறைவேற்றுவதற்கு மதிப்பீடு செய்யப்பட்ட ரூபா 17.32 மில்லியன் ஆன 11 வீதி பராமரிப்பு வேலைகளும் கைவிடப்பட்டிருந்தது. | நாட்டில் காணப்பட்ட நெருக்கடியான நிலைமையின் காரணமாக இந்த செயற்திட்டத்தை அமுல்படுத்த முடியாதிருந்தது. | அபிவிருத்தி திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) மாகாண காணி, நீர் பாசனம், பெருந்தொருக்கள், வீடமைப்பு, கிராம அபிவிருத்தி மற்றும் மகளிர் அலுவல்கள் அமைச்சு 2021 ஆம் ஆண்டில் கிடைத்த நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் வீதி பராமரிப்பு செயற்பாடுகளுக்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 180,082 ஆன கிரவல் மற்றும் ரூபா 983,823 ஆன தார் என்பவற்றை ஈடுபடுத்தி மீளாய்வாண்டின் போது வீதி புணரமைத்தல் செயற்திட்டங்களை மேற்கொண்டு அப்பெறுமதி மீண்டும் அமைச்சில் இருந்து மீளளிப்பு செய்யப்பட்டுள்ளது. | எதிர்வரும் ஆண்டின் போது சரிசெய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதிய பயன்பாட்டின் போது உரிய மேற்பார்வை பேணிச் செல்ல வேண்டியிருந்ததுடன், மேலதிகமாக அறவிடப்பட்ட பணம் சரிசெய்யப்படல் வேண்டும். |

### 1.5.17 தலைப்பு 652 – மாகாண காணி ஆணையாளர் திணைக்களம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாகாண காணி ஆணையாளர் திணைக்கத்தின் பதிவேடுகளின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு வருமான குறியீட்டு இலக்கம் 2002-01-03 காணி மற்றும் ஏனைய அனுமதிப் பத்திர கட்டணத்தின் கீழ் நிலுவை மீதி ரூபா 313,416,505 ஆகும். | இது தொடர்பாக பிரதம செயலாளரின் 2022.10.04 ஆம் திகதிய அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு மிகதி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. | நிலுவை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.18 தலைப்பு 653 மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதி வரையில் கிராம அபிவிருத்தி நிதியம் ஸ்தாபிக்கப்பட்டு 10 வருடங்கள் அளவிலான காலம் கடந்திருந்த போதும் நிதியத்தின் விதி தயாரிக்கப்படாமையின் காரணமாக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதியத்தின் வங்கி கணக்கில் ரூபா 1,875,906 தொகை அந்த நோக்கங்கள் மற்றும் இலக்குகளை நிறைவேற்றுதற்காக ஈடுபடுத்தப்படாமல் பயனற்று காணப்பட்டது. | நிலையான வைப்புக்களில் ஈடுபடுத்துவதற்கு பிரதம செயலாளர் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதுடன், நிதியம் தொடர்பாக தீர்மானம் எடுப்பதற்காக உயர் முகாமைத்துவ குழுவொன்றை நியமித்துள்ளது. | மாகாண சபை ஸ்தாபிக்கப்பட்ட பின்னர் உரிய தரப்பினரை வரவழைத்து சட்டங்களை விதிகளை தயாரித்து அங்கீகரித்துக் கொள்ளல் வேண்டும். |

### 1.5.19 தலைப்பு - 660 பிரதம செயலகம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) பிரதம செயலகத்தில் சேகரிக்கப்பட்ட முத்திரைக் கட்டணம் மற்றும் நீதிமன்ற தண்டப் பணத்தின் கீழ் உரிய உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு மேலும் செலுத்த வேண்டிய தொகை முறையே ரூபா 126,989,584 மற்றும் ரூபா 41,580,673 ஆகும். | உள்ளூராட்சி நிறுவனங்களில் இருந்து கிடைக்க கோரிக்கையின் பிரகாரம் இந்த கட்டணம் விடுவிக்கப்படுகின்றது. | உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு உரித்தான வருமானம் அந்த நிறுவனத்திற்கு விடுவிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | கொரகஹவெவ முகாமைத்துவ பயிற்சி பிரிவை நிர்மாணிப்பதற்காக மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 182,921,248 செலவிடப்பட்டிருந்த போதிலும், எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தி மட்டத்தை அடைந்து கொள்ளாமல், தேவையான பயிற்சி இயலளவை மேலும் அதிக இயலளவை உடைய கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டு ஒரு பகுதியாக நிர்மாணிக்கப்பட்டமை மாகாண சபை திணைக்களத்திற்காக தனியான பயிற்சி நிலைமையொன்று காணப்பட்டமையின் காரணமாக இந்த பயிற்சி நிலையம் குறைவாக பயன்படுத்தப்பட்டிருந்தது. | கட்டணம் அறவிடும் அடிப்படையில் பல்வேறு விழாக்கள் மற்றும் வரவேற்பு நிகழ்ச்சிகளுக்காக வழங்கப்பட்டிருந்ததுடன், இந்த கட்டிடத்தின் ஒரு பகுதி வெளிநாடு செல்கின்ற ஊழியர்களை பயிற்சி அளிக்கின்ற நிறுவனத்திற்கு வாடகை அடிப்படையில் வழங்குவதற்கு கலந்துரையாடல் மேற்கொள்ளப்படுகின்றது. | பயிற்சி பிரிவை ஆக்கபூர்வமானதாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | வடமத்திய மாகாண சபைக்கு சொந்தமான பாவணையில் இருந்து அகற்றப்பட்ட விற்பனை செய்யக் கூடிய நிலைமையில் காணப்படுகின்ற 80 வாகன்ஙகள் ஏலத்தில் விற்பனை செய்வதற்காக 2022 ஆம் ஆண்டில் சனவரி மாதம் பிரதம செயலாளர் நியமித்த குழுவொன்றினால் தீர்மானிக்கப்பட்ட போதும் அந்த பணிகள் 2023 மார்ச் 31 ஆம் திகதி வரையிலும் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இனங்காணப்பட்ட வாகனங்களை ஏலத்தில் விற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | விற்றுத் தீர்க்கும் நடவடிக்கைகளை விரைவாக மேற்கொண்டு முடிவுருத்துதல் வேண்டும். |
| (ஈ) | பிரதம செயலகத்தின் அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பண கணக்கில் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 12 வருடங்களை விஞ்சி அறவிடப்படாது காணப்படுகின்ற 08 ஊழியர்களின் கூட்டு மொத்தம் ரூபா 1,855,552 ஆகும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | முற்பண கணக்குகளில் காணப்படுகின்ற நிலுவை கடனை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (உ) அவசர சந்தர்ப்ப நிதியத்தின் 2010 ஆம் ஆண்டின் ஆரம்பம் முதல் மீளாய்வாண்டின் ஆகஸ்ட் மாதம் வரை ரூபா 13,000,000 நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்த ரூபா 1,205,684 முதல் ரூபா 13,594,474 வீச்சில் பணம் சேமிப்பு கணக்கில் காணப்பட்டது. | கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள அவதானிப்புக்களுடன் இணங்குவதுடன் எதிர்காலத்தில் அவ்வாறான நிலைமையை தடுப்பதற்கு குறிப்பிடுகின்றோம். | நிதியத்தின் கணக்குகளில் காணப்படுகின்ற மீதிகளை மிகவும் ஆக்கபூர்வமான முதலீடுகளில் ஈடுபடுத்துதல் வேண்டும். |

### 1.5.20 தலைப்பு 621 - மாகாண திறைசேரி

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| மாகாண சபை நிதியத்தில் ரூபா 1,798,423,885 தொகை காலாவதியாகிய பின்னர் சுயமாக புதுப்பிக்கும் முறையில் குறுங்கால முதலீடுகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன், அந்த வைப்புக்கள் ஒவ்வொரு காலப்பகுதிக்காக அரசாங்க வணிக வங்கிகளில் போட்டி விலையின் அடிப்படையில் மிகவும் ஆக்கபூர்மான வழிகளில் ஈடுபடுத்துவது தொடர்பில் முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்கவில்லை. | மாகாண சபை நிதியத்திற்குரிய கணக்குகள் காணப்படுகின்ற இரண்டு அரச வங்ககளில் இந்த பணம் முதலீடு செய்ய்பபட்டுள்ளது. | போட்டி வட்டி வீததத்தின் அடிப்படையில் ஆக்கபூர்மான முதலீடுகள் தொடர்பில் கவனம் செலுத்துதல் வேண்டும். |